**கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை),**
**கோயம்புத்தூர்**

**COS.No. 51 of 2025**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4ம் நாள் புதன்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | DW1–Mr.P.Tharanidharan | கிராமம்: | |
| த.பெ. | Mr.R.O.Palanisamy | வேலை: | |
| வயது | 45 | செல்போன் எண் | |

முதல் விசாரணை:

என் பெயர் P.தரணிதரன், வயது 45, த/பெ.R.O.பழனிசாமி. நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். ஆவணங்கள் இல்லை.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

இந்த வழக்கு விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும்.

உங்கள் தந்தை எப்போது காலமானார் என்றால் 21.01.2025ல் காலமானார்.

அவரது இறப்பு சான்றை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

Ex.A.3 ஆவணத்தில் உங்கள் தாயாரும் நீங்களும் guarantor ஆக கையொப்பமிட்டுள்ளீர்கள் என்று சாட்சியிடம் இவ்வழக்கில் தாக்கல்

செய்யப்பட்டுள்ள Ex.A.3 ஆவணம் காண்பித்துக் கேட்கப்பட்டது, சாட்சி அந்த ஆவணங்களை பார்த்து அவற்றில் தானும், அவருடைய தாயாரும் கையொப்பமிட்டு இருப்பதாக தெரிவித்தார்.

உங்கள் தந்தையின் வாரிசாக உங்கள் தந்தை வாங்கிய கடனை செலுத்த நீங்கள் கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் guarantor ஆக இருந்து கையொப்பம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல, நான் guarantor ஆக இருக்கவில்லை சாட்சியாக தான் கையொப்பமிட்டேன்.

வங்கியில் இருந்து உங்களுக்கு 01.02.2014 தேதியில் recall notice பெற்றுக்கொண்ட பிறகு நீங்கள் அதை மறுத்து ஏதாவது தெரிவித்தீர்களா என்றால் அவ்வாறு recall notice வந்தது எனக்கு தெரியாது.

நீங்கள் இந்த வழக்கு கடன் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் கையொப்பமிட்டுள்ளீர்கள், அவ்வாறு கையொப்பமிட்ட பிறகு தான் இந்த கடன்கள் வாதி நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் வெற்றுத்தாளில் புத்தகங்களில் கையொப்பமிடச் சொல்லி கேட்டார்கள், நான் கையொப்பமிட்டேன்.

வங்கியில் நீங்கள் பணம் செலுத்துவதாக கூறி அறிவிப்பு ஏதாவது கொடுத்தீர்களா என்றால் இல்லை, என் தகப்பனார் இந்த கடனுக்காக தொகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை என்றும், ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது அதனால் தொகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை என்று கூறியிருந்தார்.

எதிர்வழக்குரையில் உங்கள் தந்தை அடமான கடன் எதுவும் வாங்கவில்லை என்று நீங்கள் தெரிவித்துள்ளீர்கள், அவ்வாறு

கூறியிருப்பது தவறானது என்று சொன்னால் கடன் வாங்கியிருந்தார், வாங்கிய கடனை தீர்த்து விட்டார்.

உங்கள் சாட்சியம் பொய்யானது, வாதி கோரியுள்ளபடி பரிகாரம் இவ்வழக்கில் வாதிக்குக் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/–K.Hariharan

Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.